

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (1.10.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் துணைத் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்ட டாக்டர் எம்.பி. விஜயகுமார், ஐ.ஏ.எஸ். (ஓய்வு) சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில்

# நெல்லை கிழக்கு மாவட்ட மாணவரணி சார்பில் பொதுக்கூட்டம்!

## தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. சிறப்புரை

நெல்லை. அக்.2-

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க மாணவர் அணி சார்பில் கழக பவள விழா, திராவிட மாடல். முதலமைச்சர் அவர்களின் முத்தான மூன்றாண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் 29092024 ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணி அளவில் கூடங்குளம் ஊராட்சி அலுவலகம் அருகில் ரோகினி மைதானத்தில் இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் மி.ஜோசப் பெல்சி தலைமையில் இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர், மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் லெட்சுமணன், ராஜதுரை, சீனிதாஸ், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ஜான்ஸ் ரூபா, ஒன்றிய கவுன்சிலர் நடராஜன், கூடங்குளம் ஊராட்சி மன்ற தலைவர் வின்சி மணியரசு, மாவட்ட பிரதிநிதி சந்திரசேகர், மாவட்ட பொறியாளர் அணி தலைவர் ஆனந்த், கூடங்குளம் கிளைச் செயலாளர் பால சுப்பிரமணியன் என்ற துரை, காந்திநகர் கிளைச் செயலாளர் பரமதாஸ், எஸ்.எஸ்.புரம்.கிளை செயலாளர் பெரியசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

நெல்லை கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், தலைமை செயற்குழு உறுப்பினரும், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் கிரகாம் பெல், தலைமை செயற்குழு உறுப்பினர் சித்திக், மாவட்ட துணைச செயலாளர்கள் நம்பி, மைக்கேல், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் எரிக் ஜூடு, பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவ ஐயப்பன், கனகராஜ், சாந்தி சுபாஷ், எட்வின் வளன்அரசு, ஒன்றிய செயலாளர்கள் கே.எஸ்.தங்கப்பாண்டியன், ராஜன், ராஜா ஞானதிரவியம், கண்ணன், சுடலைக்கண்ணு, போர்வெல் கணேசன், நகர செயலாளர்கள் மணி சூரியன், கணேசன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் ஜான்ரபீந்தர், மல்லிகா அருள், செல்வ சூடாமணி, மாடசாமி, முருகன், சகாயபிரபு, ரகுமான், கேசவன், கார்த்திக் குமார், நெல்லை மணி, நெடுஞ்செழியன், ஜெயசீலன், பீர்முகமது, அன்வர் உசேன், பிரேம் ஆனந்த், பேரூர் செயலாளர்கள் தமிழ்வாணன், சேதுராமலிங்கம், இசக்கிபாண்டியன், கசமுத்து, அயூப்கான், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் பாஸ்கர், சாந்தி சுபாஷ், சாலமன் டேவிட், கிருஷ்ணவேணி, மகேஷ் குமார், சத்தியவாணி முத்து, அருண் தவசு பாண்டியன், ராதாபுரம் மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் ராமையா, செங்குட்டுவன், செழியன், ரமேஷ் துரை, கோவிந்தராஜ், முரளி, அன்டலின் ஸ்டெபி, கூடங்குளம் ஊராட்சி கழக நிர்வாகிகள் சுந்தர லிங்கம், திருமணி, ரத்தனசாமி, முத்து, தாமஸ், உட்லின், கண்ணன், தவசிகுமார், பாலமுருகன், செல்வன், காட்வின், பிரசாந்த், ரூபன், சக்திவேல், தேவி, லட்சுமி, சுயம்பு உள்பட ஒன்றிய பேரூராட்சி கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி துணை நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஏ.லெட்சுமணன் நன்றியுரையாற்றினார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நெல்லை கிழக்கு மாவட்ட மாணவர் அணி செய்திருந்தனர்.

தென்காசி வடக்கு மாவட்டக் கழகத்தினர்

# வாக்காளர் பட்டியல் சேர்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் அறிக்கை!

தென்காசி.அக்.2-

தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025 தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு தமிழகத்தில் உள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தயல் ஆணையம் 29.10.2024



வெளியிட உள்ளது.29.10.2024 முதல் 28.11.2024 வரை பெயர்கள் நீக்குதல், திருத்தம் செய்யவும் மனு செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டு ள்ளது.

இது தவிர தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் நிர்ண யிக்கப் பட்ட வாக்கு சாவடி மையங்களில் காலை 9:30 மணி முதல் மாலை 530 மணி வரை சிறப்பு முகாம்களும் நடத்தப்பட உள்ளன. இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 01.01.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்தந்த படிவங்களை அந்தந்த முகாம் மையங்களில் கொடுக்க வேண்டும்.இதன் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 1 ம் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்துள்ள வாக்காளர்களின் பெயர்களையும், இறந்த வாக்காளர்களின் பெயர்களை தற்போது உள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் நாட்கள் 29.10.2024. பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்கள் தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்கள் ஆகும்.இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 06.01.2025 ஆகும்.

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ள நாட்களிலும் தென்காசி தெற்கு மாவட்டத்தை சேர்ந்த நிர்வாகிகள், இப்பணிகள் குறித்து மேற்கண்ட நடவடிக்கை களை மாவட்ட கழகத்திற்கு அவ்வப்போது தெரியப்படுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கழக முதல்வர் தளபதி அவர்களால் துணை முதல்வராக நியமிக்கப்பட்டு பொறுப்பேற்றுள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பணி சிறக்க வாழ்த்தி சிவகங்கை மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் எம். குமணன் ஏற்பாட்டின் பேரில் சிவகங்கை தாய் தவமும் மாற்றுத்திறனாளிகள் இல்லத்தில் மதிய உணவு மற்றும் நலத்திட்ட உதவிகளை ஒன்றிய செயலாளர்கள் எம். ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவாணிகணேசன்ஆகியோர் வழங்கினார்கள். உடன் நிர்வாகிகள் உள்ளார்கள்.

# சிவகங்கை மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

## மாநில செயலாளர் ஹெலன் டேவிட்சன் சிறப்புரை

சிவகங்கை, அக்.2-

சிவகங்கை மாவட்ட அளவிலான மகளிரணி நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் ஒக்கூர் அண்ணா நகரில் மாநில மகளிர் அணி செயலாளர் திருமதி. ஹெலன். டேவிட்சன் தலைமையில் முன்னாள் எம்.பி. திருமதி பவானி ராஜேந்திரன், திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் வரவேற்றுப் பேசினார்.

கூட்டத்தில் கழகத் தலைவர் தளபதி அவர்களின் வேண்டுகோளின் படி

கழகத்தில் அதிகமான அளவில் மகளீர்களை உறுப்பினர்களாக சேர்ப்பது குறித்தும் ஒன்றிய, நகர, பேரூர் அளவில் சென்று உறுப்பினர்களை வீடு வீடாக சென்று சேர்ப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

இந்த கூட்டத்தில் மாவட்ட மகளிர் அணி தலைவர் மு.மணிமேகலை. மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி. ஹேமலதா செந்தில், மாவட்ட மகளிர் தொண்டரணி தலைவர் திருமதி குழந்தை. தெர சாள் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் திருமலை முத்துராமலிங்கம் கடம்பசாமி, மற்றும் மாவட்ட அளவிலான ஒன்றிய நகர மகளிரணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் பத்மாவதி தனியார் தொழிலாளர் நிறுவனத்தின் மூலமாக 93 சுகாதார பணியாளர்கள் பணி செய்து வந்த நிலையில், தொழிலாளர்களின் கோரிக்கையை நிறைவேற்ற அந்த நிறுவனம் மறுத்து வந்த நிலையில் 30.9.2024 ந்தேதி AITUC தொழிலாளர் சங்க செயலாளர் சி.ஆர்.செந்தில் தலைமையில் உள்இருப்பு போராட்டம் மற்றும் சாலை மறியல் நடைபெறும் என அறிவித்து போராட்டத்திற்கு தயாரான நிலையில் இருந்ததை அறிந்து, மாவட்ட கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான காதர்பாட்சாமுத்துராமலிங்கம் அவர்களின் ஆலோசனைப்படி சம்பவ இடத்திற்கு இராமேஸ்வரம் நகரக் கழகச் செயலாளர் நகர் மன்றத்தினர் கே.இ.நாசர்கான் விரைந்து சென்று இரு தரப்பையும் அழைத்து பேசி தொழிலாளர்களின் கோரிக்கையை நிறைவேற்ற, பத்மாவதி தனியார் நிறுவன மேலாளர் அவர்களை அறிவுறுத்தி நிறைவேற்ற வலியுறுத்தினார். அதனை ஏற்றுக்கொண்டதால் இருதரப்பும் சமாதானம் அடைந்து பிரச்சனை முடிவுக்கு வந்து தொழிலாளர்கள் வழக்கம் போல் பணிக்கு திரும்பினார்கள். இதில் காவல்துறை ஆய்வாளர், சார்பு ஆய்வாளர், அனைத்து கட்சி தலைவர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் - திண்டுக்கல் மண்டலம் சார்பில்

# போக்குவரத்துப் பணியாளர்களுக்கு கண் மருத்துவ முகாம்!

## பொதுமேலாளர் ஆர். சசிகுமார் தொடங்கி வைத்தார்

திண்டுக்கல், அக்.2-

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் மதுரையில் லிமிடெட் திண்டுக்கல் மண்டலம் சார்பில் போக்குவரத்து பணியாளர்களுக்கு கண் மருத்துவ பரிசோதனை முகாமினை பொது மேலாளர் ஆர்.சசிகுமார் அவர்கள் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் மதுரையில் லிமிடெட் திண்டுக்கல் மண்டலம் சார்பாக, தொழில் நல்லுறத் துறையின் மூலம் போக்குவரத்து துறையில் உள்ள அனைத்து அலுவலர்கள் , பணியாளர்கள், ஓட்டுநர்கள் நடத்துனர்கள் மற்றும் புதுப்பிக்கும் பிரிவில் உள்ள பணியாளர்கள் அனைவருக்கும் மதுரை டாக்டர் அகர்வால் கண்மருத்துமனை மூலம் இலவச கண் மருத்துவ முகாம் நடைபெற்றது.

இம்முகாமினை பொது மேலாளர் திரு ஆர் சசிகுமார் அவர்கள் தொடங்கி வைத்தார். இம்முகாமினில் சுமார் 150ற்கும் மேற்பட்டோர் இலவச கண் பரிசோதனை செய்து கொண்டனர்.

மேலும், திண்டுக்கல் மண்டலத்திற்குட்பட்ட (திண்டுக்கல் & தேனி) 15 கிளைகளிலும் டாக்டர் அகர்வால் கண்மருத்துவ குழுவினர் மூலம் கண் பரிசோதனை நடத்தப்படவுள்ளது. மேற்கண்ட தகவலை தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் திண்டுக்கல் மண்டலம் சார்பில் தெரிவிக்கப்பட்டள்ளது.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## வீரபாண்டி ஆ. இராஜா
## அக்டோபர் 2 (2021)



தனது இளமைப் பருவத்திலேயே தனது தந்தையாகிய வீரபாண்டியாரின் வழியில் கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்டச் செயலாளர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்கள் அனைத்தையும் முன்னெடுத்து நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “சேலம் மண்டலத்தில் கழகம் வளர்க்கும் வீரனாக வலம் வந்த தம்பி வீரபாண்டி ராஜா” என்று தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## சூலூர் எஸ்.எஸ்.பொன்முடி
## அக்டோபர் 2 (2012)



மாவட்டக் கழக துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், ஒன்றியக் கழகச் செயலாளர் என்ற பொறுப்புகளை வகித்து, சூலூர் பகுதியில் கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.

சூலூர் பேரூராட்சித் தலைவர், நிலவள வங்கித் தலைவர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர், பல்லடம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாக மக்கள் பணியாற்றியவர்.

1986ஆம் ஆண்டு முதல் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.